*1974 சனவரி 25]*

(ii) தென் ஆர்க்காடு மாவட்டத்திற்காக, கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு இணைப்பதிவாளர்களது தனிவட்டாரம் ஒன்று 15—12—1972 முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(iii) தவிரவும், கோயம்புத்தூர், தஞ்சாவூர் தணிக்கை வட்டங்கள் மேற்கு கோயம்புத்தூர், கிழக்கு கோயம்புத்தூர் எனவும் மேற்கு தஞ்சாவூர், கிழக்கு தஞ்சாவூர் எனவும் பிரிக்கப் படவேண்டும் என 1973 ஆகஸ்டில் அரசு உத்தரவிட்டுள்ளது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** இந்தக் கூட்டுறவு சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டும் என்று பல்வேறு குழுக்கள் அடிக்கடி பரிந்துரை செய்து வருகின்றன. அண்மையில் கூட இண்டர் நேஷனல் கோவாபரேடிவ் அலயன்ஸ் என்ற ஒரு அமைப்புடன் மூன்று நபர் ஆராய்ச்சிக் குழு ஒன்று இங்கு இருக்கிற கூட்டுறவு சட்டத்தையும் கூட்டுறவு அமைப்புகளையும் ஆராய்ந்து விரிவான அறிக்கையை தந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தைத் திருத்தி அமைக்கவேண்டும் என்ற அறிக்கை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா? ஆமெனில் அந்த அடிப்படையில் கூட்டுறவு சட்டத்தை திருத்துவதற்கான எண்ணம் ஏதாவது அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அது பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. அ. பரந்தாமன்:** கூட்டுறவுத் துறையில் பல மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று சந்தானம் கமிட்டி ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது. அந்த அறிக்கையின் அடிப்படையில் சில மாற்றங்கள் செய்யப்பட இருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அதைப்பற்றி மாற்றம் செய்வதற்கான பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

## தமிழ்நாடு கேரள எல்லையிலுள்ள சோதனைச்சாவடி

***176. வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு-கேரள எல்லையில் பணி புரிந்த செக்போஸ்ட் அதிகாரிகளைப்பற்றி புகார்கள் ஏதும் தமிழ்நாடு அரசுக்கு கேரள அரசு சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பு அனுப்பியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) 1972-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ஓர் புகார் வரப்பெற்றது.

(இ) விஷயம் புலனாய்வில் உள்ளது.

***177 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 ஆகஸ்ட் மாதம் கோவையிலிருந்து கேரளாவிற்கு அரிசி கடத்திச் செல்லுவதற்கு போலீசார் எவரேனும் ஈடுபட்டனரா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) ஆம்.

(இ) 1973 ஆகஸ்ட் மாதம் 5-ந் தேதியன்று கோவையிலிருந்து கேரளாவிற்கு போலீஸ் லாரியில் அரிசி கடத்திச் செல்ல முயன்ற கேரள போலீஸைச் சேர்ந்த ஒரு உதவி சப்-இன்ஸ்பெக்டர், ஒரு ஹெட்கான்ஸ்டபிள், ஒரு கான்ஸ்டபிள் மற்றும் ஒரு ஹவில்தார் டிரைவர் ஆகியோர் மதுக்கரை அருகே கோவை நகர் காவல் துறைப்பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு, பின்பு பாலக்காடு டி.எஸ்.பி. யின் ஜாமின் பேரில் விடுவிக்கப்பட்டனர்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** இந்தப் போலீஸார் மீது ஏதாவது வழக்குப் பதிவு செய்யப்பட்டதா? அது எந்த நிலையில் உள்ளது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** முதலில் வழக்கு தொடர ஏற்பாடு செய்யப்பட்டு அங்குள்ள கேரள தலைமை போலீஸ் அதிகாரிகளும் நம்முடைய தலைமை போலீஸ் அதிகாரிகளும் பேசி, அண்டை மாநிலத்தில் நடக்கிற அதிகாரிகள் செய்த குற்றங்களை அந்த மாநிலத்திலுள்ள தலைமை அதிகாரிகள் அந்த அதிகாரிகள் மேல் குற்றத்தை எடுத்துக்கொண்டு அந்தந்த சர்க்கார் அதைப் பற்றி தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறி அந்த வழக்குகள் ராஜி செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இது சம்பந்தமாக கேரள மாநில அரசு அதிகாரிகள் மீது ஏதாவது வழக்கு தொடரப்பட்டுள்ளதா? அதன் விவரத்தை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?